IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

OS.No.132/2014

Deposition of PW.2 witness of Plaintiff/Petitioner/Claimanent/ Defendant/ Respondent solemnly affirmed by Bench Clerk Gr–II Thiru.Rathinavel in OS Section of this court in accordance with the provisions of Evidence Act X 1872 on 05.01.2021

| | | | |
|---|---|---|---|
| Name | : வீரராஜ் | Caste | : |
| த/பெ. | : அப்பு | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

முதல் விசாரணை

சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல். சத்திய பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். இவ்வழக்கில் நான் 6ம் வாதி. எனது தகப்பனார் வா.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் இருக்கும்போது இறந்துபோனார். அவர் மூலமாக குறியீடு செய்யப்பட்ட கீழ்க்கண்ட ஆவணங்களை மீண்டும் என் மூலமாக குறியீடு செள்யய வேண்டுகிறேன்.

1. வா.சா.ஆ.1 – 10.8.2001 தேதிய 4ம் பிரதிவாதி தரப்பில் அ.வ.எண்.219/2013 வழக்கில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மேட்டுரில் தாக்கல் செய்த உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல்

2. வா.சா.ஆ.2 – 10.8.2001 மேற்படி உயில் சாசனம் சான்றிட்ட நகல்

3. வா.சா.ஆ.3 – 13.7.2011 4 முதல் 7 பிரதிவாதிகள் 8 முதல் 10 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரயப் பத்திரம் சான்றிட்ட நகல்

4. வா.சா.ஆ.4 – அ.வ.எண்.219/2013 வழக்குரை நகல் (DMC, மேட்டுர்)

5. வா.சா.ஆ.5 – 4ம் பிரதிவாதி வாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்த அ.வ.எண்.240/13 வழக்குரை நகல் (Sub Court, Mettur)

6. வா.சா.ஆ.6 – வம்சாவழிப்பட்டியல்

7. வா.சா.ஆ.7 – அ.வ.எண். 219/2013 ன் (DMC, மேட்டுர்) வாதிகள் தாக்கல் செய்த பதிலுரை

8. வா.சா.ஆ.8 – அ.வ.எண்.240/13 ல் (Sub Court, Mettur) வாதிகள் தாக்கல் செய்த பதிலுரை

9. வா.சா.ஆ.9 – அ.வ.எண்.163/2014 (DMC, மேட்டூர்) வழக்கில் வாதிகள் தாக்கல் செய்த பதிலுரை

10. வா.சா.ஆ.10 – 1ம் வாதி 4 முதல் 10 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்த சி.சி.எண்.135/2014 வழக்கு நகல்

11. வா.சா.ஆ.11 – நாங்கள் வட்டாட்சியர், கிராம நிர்வாக அதிகாரி ஆகியோருக்கு அனுப்பிய வழக்குரைஞர் அறிவிப்பு நகல் அஞ்சலக ரசீதுகள்

12. வா.சா.ஆ.12 – அஞ்சலக ஒப்புதல் அட்டைகள்.2

13. வா.சா.ஆ.13 – நாங்கள் சார் பதிவாலருக்கு அனுப்பிய வழக்குரைஞர் அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சலக ரசீதுகளுடன்

14. வா.சா.ஆ.14 – அஞ்சல் ஒப்புதல் அட்டைகள்

15. வா.சா.ஆ.15 – அமராவதி பெயரில் உள்ள பட்டா அசல்

16. வா.சா.ஆ.16 – 23.04.2018 – எனது தந்தையின் இறப்பு சான்றிதழ் – போட்டோ நகல்

17. வா.சா.ஆ.17 – எனது தந்தையின் வாரிசு சான்றிதழ் – போட்டோ நகல்

(மேற்படி ஆவணங்களில் வா.சா.ஆ.10 குற்றவியல் வழக்கு நகல் குறித்து 4ம் பிரதிவாதி தரப்பு வழக்குரைஞர் மேற்படி வழக்கு மோசடியாக பிரதிவாதிக்கு எதிராக தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டு என்று ஆட்சேபனை செய்ததற்குட்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது மற்றும் வா.சா.ஆ.16, 17 ஆவணங்கள் போட்டோ நகல் என்பதால் ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபனையின்பேரில் குறியீடு செய்யப்பட்டுள்ளது)

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

ஒப்பம்/PW2

ஒப்பம்/திரு.எம்.பாலமுருகன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.